**பாடம் 5**

# பழைய ஏற்பாட்டு விசுவாசம்

**மனன வசனம்**

**மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். கலா 3:13.**

**ஆராய்ச்சிக்கு**

**கலா 3:1-14; ரோமர் 1:2; ரோமர் 4:3; ஆதி 15:6; ஆதி 12:1-3; லேவி 17:11; 2 கொரி 5:21.**

ஜூலை 22 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



சிறுவன் ஒருவன் குட்டிப்படகு ஒன்று செய்தான்; அதற்கு வண்ணம்பூசி அழகு படுத்தினான். ஒருநாள் அதை யாரோ திருடிச் சென்றுவிட்டார்கள்; அவனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. பிறகு கடை ஒன்றில் அந்தப் படகைக் கண்டான். கடைக்காரரிடம் சென்று, ‘‘அது என்னுடைய படகு’’ என்றான். ‘‘ இல்லை. இதை நான் விலைகொடுத்து வாங்கியிருக்கிறேன்’’ என்று சொன்னார் கடைக்காரர். ‘‘இருக்கலாம், ஆனால் இதைச் செய்தது நான்தான்’’ என்றான் சிறுவன். ‘‘சரி, இரண்டு டாலர் பணம் கொடுத்து, இதை நீ வாங்கிச்செல்லலாம்’’ என்றார் கடைக்காரர். அந்தச் சிறுவனிடம் ஐந்து பைசாகூட கையில் இல்லை. ஆனாலும், அந்தப் படகை வாங்கத் தீர்மானித்தான். வீட்டுவேலைகள் செய்து, தேவையான பணம் சம்பாதித்தான்.

‘‘கடைக்கு ஓடிச்சென்று, பணத்தைச் செலுத்திப் படகை வாங்கினான். அதை அணைத்து முத்தமிட்டான். முதலில் உன்னைச் செய்ததும் நான்தான்; இப்போது உன்னை விலைகொடுத்து வாங்கியுமிருக்கிறேன். எனக்கு நீ இரண்டுமுறை சொந்தம்’’ என்று உணர்ச்சிப் பொங்கக் கூறினான்.

அதுபோல்தான் நாமும். நாமும் இரண்டு முறை தேவனுக்குச் சொந்தமாகியிருக்கிறோம். முதலில் தேவன் நம்மைச் சிருஷ்டித்தார். அதன்பிறகு, இயேசு வந்து, தங்கத்தாலும் வெள்ளியாலும் அல்ல; விலையேறப்பெற்ற தம்முடைய இரத்தத்தையே விலையாகக் கொடுத்து நம்மை வாங்கியிருக்கிறார். நம்மைச் சிருஷ்டித்தும் மீட்டும் தமக்குச் சொந்தமாக்கியிருக்கிறார் தேவன்.

2017, ஜூலை 29 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## புத்தியில்லாக் கலாத்தியர்

**கலா 3:1-5 இல், கலாத்தியரிடம் பவுல் சொல்வது என்ன? இதேபோன்ற ஆவிக்குரிய படுகுழியில், அதாவது விசுவாசத்தில் துவக்கி, கிரியைத்துவத்தில் முடிக்கும் ஆபத்தில் நாமும் விழுந்துவிட எவ்வாறு வாய்ப்பிருக்கிறது?**

''புத்தியில்லாத'' கலாத்தியர் என்று வச 1 இல் பவுல் சொல்வதின் பொருளைச் சரியாகத் தெரிவிப்பதற்கு, வெவ்வேறு மொழிபெயர்ப்புகள் வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்துகின்றன. புத்தியில்லாத என்பதற்கு 'அனோடெய்' எனும் கிரேக்கச் சொல்லை பவுல் பயன்படுத்துகிறார். இது 'நோஸ்' (புத்தி) எனும் வார்த்தையிலிருந்து உருவானது. அனோடெய் என்றால் 'புத்தியில்லாத' என்று அர்த்தம். அதாவது, யோசிக்கும் தன்மையைக் கலாத்தியர் இழந்திருந்தனர். அவர்கள் நிலையைப் பார்த்து, 'மந்திரவாதி எவரேனும் அவர்களை மயக்கி இருப்பார்களோ?' என்றும் கேள்வி எழுப்புகிறார். அதாவது, 'உங்களை மயக்கினவன் யார்?' என்று கேட்கிறார். சாத்தான்தான் பின்னணியிலிருந்து செயல்படுகிறான் என்பதை உணர்ந்ததால் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். 2 கொரி 4:4.

'கிறிஸ்துவின் சிலுவைதான் இரட்சிப்பின் மூலாதாரம்' என்பதைக் கலாத்தியர் அறிந்திருந்தார்கள். எனவேதான், நற்செய்திக்கு அவர்கள் புறமுதுகு காட்டினது பவுலுக்குக் குழப்பமாக இருந்தது. கலா 3:1இல் 'வெளிப்படுத்தப்பட்டிருந்தார்' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தையை 'வர்ணிக்கப்பட்டிருந்தார்', 'விளம்பரப்படுத்தப்பட்டிருந்தார்' என்றும் மொழிபெயர்த்திருக்கலாம். எல்லோரும் காணும்படி அறிவிக்கப்பட்டிருந்தாரென இவ்வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன. பவுல் தனது பிரசங்கத்தில் சிலுவையைத்தான் முக்கியப்படுத்தினார்; எனவே, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துதான் கலாத்தியரின் மனக்கண்களில் தோன்றியிருக்க வேண்டும். 1கொரி 1:23; 2:2. ஆனால், அவர்கள் செய்த காரியம் சிலுவைக்குப் புறமுதுகு காட்டினதுபோல் இருந்ததாக பவுல் கூறுகிறார்.

பிறகு, 'கலாத்தியர் முதலில் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கினது எப்படி? இப்போது அவர்களுக்கு என்னவாயிற்று?' என்று வேறுபடுத்திக் காட்டுகிறார் பவுல். அவர்களைப்பற்றி அவர் கேட்கும் சில கேள்விகளிலிருந்து இதை நாம் அறியலாம். ஆவியானவரை அவர்கள் எப்படிப் பெற்றுக்கொண்டார்கள்? அதாவது, முதலில் அவர்கள் கிறிஸ்தவர்களானது எப்படி? வேறுவிதமாகச் சொன்னால், ஆண்டவர் அவர்களுக்கு ஆவியானவரை அருளினது ஏன்? ஏதாவது செய்து அதற்கான தகுதியை அவர்கள் பெற்றிருந்தார்களா? நிச்சயமாக இல்லை. கிறிஸ்து ஏற்கனவே தங்களுக்கு நிறைவேற்றியிருந்தவை குறித்த நற்செய்தியை அவர்கள் விசுவாசித்ததுதான் அதற்குக் காரணம். நன்றாக ஆரம்பித்தார்கள். இப்பொழுது தங்கள் நடத்தையைப் பொறுத்துதான் எல்லாம் அமைகிறதென நினைக்கிறார்கள். எதனால் இந்த மாற்றம்?

---

நான் ஒரு நல்ல கிறிஸ்தவன். 'இந்தெந்தக் காரியங்களை நான் செய்வதில்லை' என்று நினைத்து, 'இரட்சிப்புக்கு நான் தகுதியானவன்தான்' எனும் எண்ணம் உருவாவதற்கு வழிநடத்தப்படுகிறீர்களா? இந்த எண்ணம் ஏன் தவறானது?

'விசுவாசத்தால்மாத்திரமே நீதிமான்களாக்கப்படுகிறோம்' எனும் நற்செய்தியை பவுல் வலியுறுத்துகிறார். தன் கருத்து உண்மைதானென்பதற்கு, எருசலேமில் அப்போஸ்தலருக்குள் ஏற்பட்ட உடன்பாட்டையும் கலாத்தியருக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் காரணங்காட்டுகிறார். கலா 2:1-10; 3:1-5. இறுதியாக, அந்த நற்செய்தியை ஊர்ஜிதப்படுத்துவதற்கு கலா 3:6 க்குப்பின் வேதத்தின் சாட்சியைக் கூறுகிறார். வேதத்தை ஆதாரமாகக்கொண்டு, நற்செய்தியை அவர் வலியுறுத்துவதைக் கலா 3:6-4:31 இல் காணலாம்.

***கலா 3:6-8 இல், 'வேதம்' என்று பவுல் எதைக் குறிப்பிடுகிறார்? ரோமர் 1:2; 4:3; 9:17.***

---

கலாத்தியருக்கு பவுல் நிருபம் எழுதிய காலத்தில் 'புதிய ஏற்பாடு' கிடையாது. பவுலின் சில நிருபங்கள்தாம் முதன்முதலாக எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களாகும். சுவிசேஷப் புத்தகங்களில், மாற்கு எழுதின நற்செய்தி நூல்தான் முதலில் எழுதப்பட்டிருக்கலாம். அதுவும், கி.பி.65 இல், பவுல் மரித்த சமயத்தில்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும். அதாவது, கலாத்தியருக்கு பவுல் நிருபம் எழுதி, 15 வருடங்களுக்குப்பிறகு அது எழுதப்பட்டிருக்கலாம். எனவே,'வேதம்' என்று பழைய ஏற்பாட்டைத்தான் பவுல் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும்.

பவுலின் போதனைகளில் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்கள் முக்கிய இடம்பெற்றிருந்தன. அவருக்கு அவை வெற்று வார்த்தைகள் அல்ல, தேவனுடைய ஜீவ வார்த்தைகள், அதிகாரமுள்ளவைகள். 'வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது' என்று 2தீமோ 3:16 இல் எழுதுகிறார். இங்கு 'ஆவி' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை 'தியோநுஸ்டோஸ்.' 'தியோ' என்றால் தேவன் என்று பொருள்; 'நுஸ்டோஸ்' என்றால் சுவாசித்தார் என்று பொருள். எனவே, வேதவாக்கியங்கள் தேவன் சுவாசித்தவை. இயேசுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்பதை வலியுறுத்தவும் (ரோமர் 1:2), கிறிஸ்தவ வாழ்க்கைபற்றிப் போதிக்கவும் (ரோமர் 13: 8-10), தன் போதனைகளின் நிஜத்தை எடுத்துரைக்கவும் (கலா 3:8,9) பழைய ஏற்பாட்டைத்தான் அவர் ஆதாரமாகக் காட்டுகிறார். தீத்துவுக்கும் பிலேமோனுக்கும் எழுதின குறுநிருபங்கள் தவிர, மற்ற எல்லா நிருபங்களிலும் பழைய ஏற்பாட்டை அவர் மேற்கோள்காட்டுகிறார்.

***கலா 3:6-14 இல் எந்த வசனங்களில் பழைய ஏற்பாட்டிலிருந்து அவர் மேற்கோள் காட்டுகிறார்? பழைய ஏற்பாட்டின் அதிகாரத்தை அது எவ்வாறு தெரிவிக்கிறது?***

---

இரண்டு ஏற்பாடுகளில் ஏதாவது ஒன்றை நீங்கள் அதிக முக்கியப்படுத்தியது உண்டா? 'அது ஆபத்தான கருத்து' என்பதுபற்றி 2 தீமோ 3:16 சொல்வது என்ன?

## நீதிமானாக எண்ணப்படுதல்

***பவுல் தன்னுடைய நற்செய்தியின் நிஜத்தன்மையை வேதவாக்கியங்கள்மூலம் நிரூபிப்பதற்கு ஆபிரகாமை முதலில் உதாரணமாகக் காட்டுவது ஏன்? கலா 3:6.***

---

யூத இனத்தின் தகப்பன் ஆபிரகாம். உண்மையான யூதன் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு, பவுல் காலத்தினர் ஆபிரகாமை உதாரணமாகக் காட்டுவார்கள். அவருடைய கீழ்ப்படிதல்தான் அவரை வேறுபடுத்திக் காட்டியதாகப் பலர் நம்பினார்கள். ஆபிரகாம் தன் குடும்பத்தாரையும் வீட்டையும் விட்டுப் புறப்பட்டார்; விருத்தசேதனச் சடங்கை ஏற்றுக்கொண்டார்; தேவனுடைய கட்டளைப்படி தன் மகனையும் பலிகொடுக்க ஆயத்தமாக இருந்தார். அதுதான் கீழ்ப்படிதல். அந்தக் கீழ்ப்படிதலின் நிமித்தமே தேவன் அவரை நீதிமானென்று சொன்னதாகப் பலர் நம்பினார்கள். விருத்தசேதனத்தை முக்கியப்படுத்தினவர்களின் வாதம் இதே வகையில்தான் இருந்தது.

ஆனாலும், பவுலின் வாதம் நேர்மாறாக இருந்தது. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கு ஆபிரகாமை முன்னுதாரணமாகக் காட்டாமல், விசுவாசிப்பதற்குத்தான் ஆபிரகாமை முன்னுதாரணமாக 9 முறை கலாத்தியரில் காட்டுகிறார்.

***ஆதி 15:6 ஐ பவுல் மேற்கோள் காட்டுகிறார். ஆபிரகாமின் விசுவாசம் அவருக்கு 'நீதியாக எண்ணப்பட்டது' என்று அவர் சொல்வதின் அர்த்தம் என்ன? ரோமர் 4:3-6; 8-11, 22-24.***

---

'நீதிமானாக்குதல்' என்பதற்கான கிரேக்கவார்த்தை சட்டரீதியானது. அதுபோல, 'எண்ணப்படுதல்' என்பதற்கான கிரேக்கவார்த்தை தொழில்ரீதியானது. இதற்கு, 'கொடுத்தல்' "ஒருவருடைய கணக்கில் சேர்த்தல்' என்று அர்த்தம்கூறலாம். கலா 3:6 இல், ஆபிரகாம் நீதிமானாக எண்ணப்பட்டார் என்று பவுல் கூறுகிறார். ஆபிரகாமைப்பற்றி 11 முறை அவ்வாறு குறிப்பிடுகிறார். 'கருதப்படுதல்', 'சுமத்தப்படுதல்' என்றும் இந்த வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

நீதி நம்முடைய கணக்கில் எண்ணப்படுவதாக பவுல் உருவகப்படுத்துகிறார். என்ன அடிப்படையில்அது நடக்கிறது? கீழ்ப்படிதலின் அடிப்படையில் அப்படி இருக்கமுடியாது. கீழ்ப்படிதலால் ஆபிரகாம் நீதிமானாக்கப்படவில்லை; நீதிமானாக்கப்பட்டதால் கீழ்ப்படிந்தார். தான் நீதிமானாக்கப்படும்படி அவர் விசுவாசக்கிரியைகள் செய்யவில்லை; தான் ஏற்கனவே நீதிமானாக்கப்பட்டதால் அவற்றைச் செய்தார். நீதிமானாக்கப்படுதல் கீழ்ப்படிதலுக்கு வழிநடத்துகிறது.

நம்முடைய கிரியைகளைவைத்து அல்ல; கிறிஸ்து நமக்காகச் செய்ததைவைத்தே நீதிமானாக்கப்படுகிறோம். இதன் அர்த்தத்தைத் தியானியுங்கள். இது ஏன் ஒரு நற்செய்தி? அதாவது, முன்பு நீங்கள் சந்தித்த, இப்போது சந்தித்து வருகிற பிரச்சனைகளுக்கு மத்தியிலும், இது உங்களுக்குரியதென நீங்கள் எவ்வாறு விசுவாசிக்கலாம்?

---

*தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது. கலா 3:8.*

ஆபிரகாமுக்குச் சுவிசேஷம் சொல்லப்பட்டதாகக் கூறும் பவுல், தேவன் தாமே அதைப் பிரசங்கித்ததாகவும் கூறுகிறார். எனவே, அது ஒரு மெய்யான நற்செய்தியாக இருக்கவேண்டும். தேவன் எப்போது ஆபிரகாமுக்கு நற்செய்தியைப் பிரசங்கித்தார்? ஆதி 12:3 ஐ பவுல் மேற்கோள் காட்டுகிறார். எனவே, ஆபிரகாமை தேவன் அழைத்தபோது, அவரோடு தேவன் பண்ணின உடன்படிக்கையைத்தான் பவுல் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆதி 12:1-3.

***ஆபிரகாமோடு தேவன் பண்ணின உடன்படிக்கையின் தன்மை என்ன? ஆதி 12:1-3.***

தேவவாக்குத்தத்தமேஅந்த உடன்படிக்கையின் அடிப்படை. 'நான் செய்வேன்' என்பதாக நான்குமுறை ஆபிரகாமிடம் தேவன் குறிப்பிடுகிறார். அங்கே தேவன்மாத்திரமே வாக்குக்கொடுக்கிறார்; ஆபிரகாம் எதுவுமே வாக்குப்பண்ணவில்லை. ஆனால், இன்று அநேகர் இதற்கு நேர்மாறாக தேவனிடம் நடந்துகொள்கிறார்கள். தேவன் எனக்கு ஏதாவது நன்மைசெய்தால், நான் அவரைச் சேவிப்பேன் என்று வாக்குப்பண்ணுகிறோம்; அது கிரியைத்துவம். ஆபிரகாமிடம் தேவன் எந்தவொரு வாக்கையும் எதிர்பார்க்கவில்லை; தம்முடைய வாக்குத்தத்தங்களை ஆபிரகாம் விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாத்திரமே விரும்பினார். அது இலகுவான ஒரு காரியமல்ல; ஏனெனில், தன்னை நம்பாமல் தேவனை முற்றிலும் நம்புவதற்கு ஆபிரகாம் கற்றுக்கொள்ளவேண்டியதிருந்தது. ஆதி22. 'விசுவாசத்தால்மாத்திரமே இரட்சிப்பு' என்பதுதான் சுவிசேஷத்தின் மையம். அதைத்தான் ஆபிரகாமின் அழைப்பு எடுத்துக்காட்டுகிறது.

இரட்சிப்புபெற இரண்டு வழிகள் உண்டென்று வேதாகமம் போதிப்பதாகச் சிலர் தவறாக நினைக்கிறார்கள். 'பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பத்துக் கற்பனைகளைக் கைக்கொள்வதைச் சார்ந்து இரட்சிப்பு இருந்தது; நினைத்தபடி அது பலன் தரவில்லை. எனவே, கற்பனைகளை தேவன் ஒழித்துவிட்டு, விசுவாசத்தினால் இரட்சிப்பு கிடைக்கும் வழியை ஏற்படுத்தினார்' என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், இது சத்தியத்திற்குப் புறம்பானது. கலா 1:7இல் பவுல் சொல்வதுபோல், ஒரே நற்செய்திதான் உண்டு.

***'விசுவாசத்தினால்மாத்திரமே இரட்சிப்பு' என்பதற்குப் பழைய ஏற்பாட்டில் உள்ள வேறு சில உதாரணங்கள் யாவை? லேவி 17:11; சங் 32:1-5; 2 சாமு 12:1-13; சக 3:1-4.***

'கிருபை மலிவானது' என்று அநேகர் நினைக்கிறார்கள். ஆனால், அது தவறு. கிருபை மலிவானது அல்ல; அது இலவசமானது. நம் கிரியைகளால் அதைப் பெற நினைக்கும் போது அல்லது நம் பாவத்திற்குச் சாக்குப்போக்காக அதைப் பயன்படுத்தும் போதுதான், அதை மலிவானதாக்குகிறோம். உங்கள் வாழ்வில், இந்த இரண்டில் எதையாவது முக்கியப்படுத்தி வருகிறீர்களா? அதிலிருந்து எவ்வாறு நீங்கள் தப்பலாம்?

## சாபத்திலிருந்து மீட்பு (கலா 3:9–4)

கலா3:10 இலுள்ள பவுலின் வார்த்தைகள் அவர் எதிரிகளைத் திகைக்கச் செய்திருக்கும். தாங்கள் ஒரு சாபத்திற்கு உட்பட்டிருப்பதாக அவர்கள் நினைத்திருக்க வாய்ப்பே இல்லை; தங்கள் கீழ்ப்படிதலால் தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களென்றே அவர்கள் நினைத்திருக்கக்கூடும். ஆனால், 'நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப் பட்டவன் என்று எழுதியிருக்கிறதே' என்று உறுதியாகச் சொல்கிறார் பவுல். கலா 3:10.

ஒன்றுக்கு ஒன்று நேர்மாறான இரண்டு வழிகளை முன்வைக்கிறார் பவுல்.

1 விசுவாசத்தினால் இரட்சிப்பு      2 கிரியைகளினால் இரட்சிப்பு

உடன்படிக்கையின் ஆசீர்வாதம், சாபம்பற்றி உபா 27,28 தெளிவாகச் சொல்கிறது. கீழ்ப்படிந்தவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்; கீழ்ப்படியாதவர்கள் சபிக்கப் பட்டார்கள். நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதால்தான், தேவன் தன்னை ஏற்றுக்கொள்கிறாரென ஒருவன் நம்பினால், அவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொள்ளவேண்டும். இன்னின்ன விதிகளைக் கைக்கொண்டால் போதுமென்று, தேர்ந்தெடுத்து கடைப்பிடிக்க முடியாது; 'நூற்றுக்கு நூறு கீழ்ப்படிதல்; அல்லது, கீழ்ப்படியாமல் இருத்தல்' என்று இரண்டே நிலைதான் உண்டு.

நாம் 'எல்லாரும் பாவஞ் செய்து, தேவமகிமையற்றவர்களானோம்'. ரோமர் 3:23. புறஜாதியாருக்கு மட்டுமல்ல, கிரியைத்துவத்தை முக்கியப்படுத்தின பவுலின் எதிரிகளுக்கும் இது ஒரு மோசமான செய்திதான். நல்லவர்களாகும்படி நாம் எவ்வளவு முயன்றாலும், நாம் மீறினவர்களென்றே நியாயப்பிரமாணம் கூறும்.

***நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து கிறிஸ்து நம்மை எவ்வாறு விடுவித்தார்? கலா 3:13; 2 கொரி 5:21.***

கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்குச் செய்ததை விவரிக்கிற இன்னொரு உருவகம் மீட்பு. அதற்கு, 'திரும்பப்பெறுதல்' என்று அர்த்தம். பிணையக் கைதிகள் அல்லது அடிமைகளை விடுவிக்க ஒருவர் செலுத்துகிற தொகைதான் மீட்பு. நம் இரட்சிப்பிற்காகச் செலுத்தப்பட்டது சாதாரணத் தொகையல்ல; தேவகுமாரனின் ஜீவன்தாமே விலையாகச் செலுத்தப்பட்டது. யோவான் 3:16. இயேசு நம் பாவத்தைத் தம்மேல் சுமந்து, நம்மை மீட்டுக்கொண்டார். 1கொரி 6:20; 7:23. பாவத்தின் தண்டனையை நமக்காக அனுபவித்தார். 2 கொரி 5:21.

உபா 21:23 இன் படி மரணதண்டனை பெற்று, மரித்தவன், மரத்தில் தொங்க விடப்பட்டால், அவன் தேவனால் சபிக்கப்பட்டவனென யூதர்கள் கருதினார்கள். சிலுவையில் இயேசு மரித்ததும் அந்தச் சாபத்தைத்தான் நினைவூட்டியது. அப் 5:30; 1பேதுரு 2:24. எனவேதான், யூதர் சிலருக்குச் சிலுவை இடறுதலின் கல்லாக இருந்தது; தேவனால் சபிக்கப்பட்டவராக இருப்பாரென்று குழம்பினார்கள்.

மேசியா சாபத்திற்குள்ளானார். அது அவர் தவறுக்காக அல்ல; நம் தவறுக்காக.

"நம்பதிலாளியும்பிணையாளியுமான கிறிஸ்துவின்மேல் நம்எல்லாருடைய அக்கிரமத்தையும் தேவன் சுமத்தினார். நியாயப்பிரமானத்தின் தண்டனையிலிருந்து நம்மை மீட்டுக்கொள்ளும்படி அவர் அக்கிரமக்காரராக எண்ணப்பட்டார். ஆதாமின் சந்ததியான ஒவ்வொருவரின் பாவமும் அவர் இருதயத்தை நெருக்கியது. பாவத்திற்கு எதிரான தேவ கோபமும் அக்கிரமத்திற்கு எதிராக தேவன் காட்டிய வெறுப்பும் அவருடைய குமாரனின் ஆத்துமாவை முற்றிலும் திகைக்கச் செய்தது. விழுந்துபோன உலகில் பிதாவின் இரக்கத்தையும் மன்னிக்கும் அன்பையும் ஒரு நற்செய்தியாக தம் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்து அறிவித்துவந்தார். பிரதான பாவியும் இரட்சிக்கப்படலாமென்றுபோதிப்பதே அவருடைய குறிக்கோளாக இருந்தது. ஆனால் இப்பொழுது, பாவம் பெரிய பாரமாக அவரை அழுத்தியது; ஒப்புரவாக்குதலின் தேவ முகத்தைக் காணமுடியவில்லை. மகா வியாகுலம் நிறைந்த அந்த வேளையில், தேவமுகம் மறைக்கப்பட்டதால் இரட்சகரின் இருதயம் வேதனையால் குத்துண்டது; மனிதன் அதை முற்றிலும் உணரமுடியாது. தமது சரீர வேதனையையும் அவர் உணரமுடியாத அளவுக்கு அவருடைய மனவியாகுலம் இருந்தது." – *DA, p.753.*

"சத்தியத்தின் வெற்றிவீரனாக லூதர் இப்போது தனது பணியில் தைரியத்துடன் இறங்கினார். பிரசங்கப்பீடத்தில் நின்று, ஊக்கத்தோடும் பக்திவிநயத்தோடும் எச்சரித்துப் பேசினார். பாவத்தின் நாசகாரத் தன்மையை மக்களுக்கு விளக்கி, மனிதன் தன் சுயகிரியைகளால் அதன் குற்றஉணர்வினைக்குறைக்கவோ அதன் தண்டனையிலிருந்து தப்பவோ முடியாதென்று போதித்தார். பாவத்திற்காக தேவனிடம் மனம்வருந்துவதும் கிறிஸ்துவில் விசுவாசம்வைப்பதுமே தவிர வேறெதுவும் பாவியை இரட்சிக்கமுடியாது. கிறிஸ்துவின் கிருபையை விலைகொடுத்து வாங்க இயலாது; அது ஓர் இலவச ஈவு. மேலும், பாவமன்னிப்புச் சீட்டுகளை விலைக்கு வாங்காமல், சிலுவையிலறையப்பட்ட மீட்பரை விசுவாசத்துடன் பார்க்கும்படி மக்களுக்கு ஆலோசனை கூறினார்." – *GC, p 129.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *'விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிக்கப்படுகிறோம். நம் கிரியைகள் அல்ல; கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் தேவ கிருபையே நம்மை இரட்சிக்கிறது' என்பதை ஏற்றுக்கொள்வது இன்றும் நம் சபையில் சிலருக்குக் கடினமாக உள்ளது. ஏன் இந்தத் தயக்கம்?*
2. *'கிரியைகளினால் இரட்சிப்பு' என்பது தவறான வேதாகமப் போதகமெனக் கண்டிக்கிறார் பவுல். சரியான வேதாகமப் போதகத்தின் முக்கியத்துவம்பற்றி அது சொல்வது என்ன?*

**பாடச்சுருக்கம்:** *கிறிஸ்துவை விசுவாசிப்பதால்மட்டுமே நாம் இரட்சிக்கப்படமுடியும். தேவனுடைய வாக்குத்தத்தங்களை ஆபிரகாம் விசுவாசித்ததினால்தான் தேவன் அவரை நீதியுள்ளவராக எண்ணினார். நமக்காக மரித்து, நம் பாவத்திற்கான விலையை இயேசு செலுத்தியதாலே, நம் குற்றங்களுக்குத்தக்கதாக நாம் தண்டிக்கப்படாமல் இருக்கிறோம்.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.